அ.வ.எண். 60/2019

பெயர் – சோலைச்சாமி(வா.சா.1)

நாள் – 29.03.2022

<u>1 மற்றும் 4 ம் பிரதிவாதிகள் தரப்பு கு.வி</u>

வா.சா.ஆ.3 பதிவு செய்யப்படாத கிரைய ஆவணத்தில் எனது பெயர் சோலைச்சாமி என்ற பால்ராஜ் என்று குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி விபரத்தை வழக்குரையில் சொல்லியுள்ளேன். 1, 2 பிரதிவாதிகள் எனது உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். 3 ம் பிரதிவாதி எனது மனைவி என்றால் சரிதான். 4, 5 ம் பிரதிவாதிகள் எனது சித்தப்பா சண்முகவேல் செட்டியாரின் வாரிசுகள் என்றால் சரிதான். எனது மனைவி இந்திரகுமாரிக்கு உடன்பிறந்தவர்கள் யாரும் கிடையாது. வா.சா.ஆ.1 பட்டா 1ம் பிரதிவாதியின் பெயரில் இல்லை என்றாலும், எனது தாத்தா சங்கரலிங்கம் பெயரில் உள்ளது என்றாலும் எனது தாத்தா பெயரும் 1ம் பிரதிவாதி பெயரும் சங்கரலிங்கம் என்பதை பயன்படுத்தி 1ம் பிரதிவாதி தவறாக பயன்படுத்துகிறார். எனது தாத்தாரவின் அப்பா பெயர் எனக்கு தெரியாது. வழக்குரை மற்றும் கொடிவழி ஜாபிதாவில் எனது தாத்தாவின் பெயர் சங்கரலிங்கம் என்று தான் குறிப்பிட்டுள்ளேன். வா.சா.ஆ.6 சண்முகவேல் செட்டியார் இறப்பு சான்றிதழில் அவரது அப்பா பெயர் சங்குசெட்டியார் என்று குறிப்பிட்டுள்ளது. சங்கரலிங்கம் செட்டியாரை சங்கு செட்டியார் என்று அழைப்பார்கள் அதனால் அவ்வாறு குறிப்பிடபட்டுள்ளது. 1வது தபசில் சொத்தின் விஸ்தீரணம் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன். அதன் வீஸ்தீரணம் எனக்கு தெரியும் தற்போது நினைவில்லை. 1வது தபசில் சொத்தை சென்ட் கணக்கிலும் குறிப்பிடலாம். ஏக்கர் மற்றும் ஹெக்டேர் அளவிலும் குறிப்பிடலாம். 1வது தபசில் சொத்து 1 சென்ட் மதிப்பு எவ்வளவு என்றால் அதுகுறித்து எனக்கு சரியாக தெரியாது. பிராதில் குறிப்பிட்டுள்ள தபசில் சொத்து மதிப்பு தவறு என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ன் படி அதில் அடங்கியுள்ள சொத்து சண்முகவேல் செட்டியாருக்கு பாத்தியப்பட்டது என்ற முறையில் தான் எனக்கு கிரையம் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி சொத்து சண்முகவேல் செட்டியாருக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்தை தான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் மொத்த சொத்தில் தபசில் 3 வது இலக்க சொத்தை சண்முகவேல் செட்டியார் பாகமாக அவருக்கு கிடைத்து அதை

எனக்கு கிரையம் செய்தார். வா.சா.ஆ.3 ஆவணம் மூலம் அந்த கிரைய சொத்தை ரூ.30000/-க்கு வாங்கினேன். பதிவு துறை சட்டம் பிரிவு 17-ன் படி ரூ.100/-க்கு அதிக மதிப்புள்ள சொத்துக்களின் பரிமாற்றம் கட்டாயமாக பதிவு செய்ய வேண்டும் என்ற விபரம் மேற்படி கிரையம் ஏற்பட்ட தேதியில் எனக்கு சரியாக தெரியாது. வா.சா.ஆ.3 கிரைய ஆவணம் பதிவு செய்யப்படாத காரணத்தினால் இந்திய சாட்சிய சட்டத்தின் படி ஒரு சாட்சியமாக ஏற்றுக் கொள்ள கூடியதல்ல என்றால் சரியல்ல. நான் 5ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு எழுதபடிக்க ஓரளவுக்கு தெரியும். பிராது 2வது இலக்க தபசில் சொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வீடு நான் பிறப்பதற்கு முன்பே எனது தாத்தா காலத்தில் கட்டப்பட்டது. மேற்படி வீட்டின் க.எண்.1/55 ஆகும். தபசில் 2ம் இலக்க சொத்தின் நான்கு மால் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன். தற்போது நினைவில்லை. 2வது இலக்க தபசில் சொத்தின் வீட்டு கதவு எண் வழக்குரையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2ன் பட்டாவில் சங்கரலிங்கம் செட்டியார் மகன் சண்முகம் செட்டியார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சண்முகவேல் செட்டியார் என்பது சண்முகம் செட்டியார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தபசில் 2 மற்றும் 3 இலக்க சொத்துகள் எனது சித்தப்பா சண்முகவேல் செட்டியாருக்கு தனித்து பாத்தியப்பட்டதாக வா.சா.ஆ.2ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 3வது இலக்க சொத்து மட்டும் தான் சண்முகவேல் செட்டியாருக்கு தனித்து பாத்தியப்பட்டது. 1 மற்றும் 2வது இலக்க தபசில் சொத்துக்கள் எங்களின் கூட்டு பாத்தியத்தில் தான் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்திற்கு விரோதமாக நான் சாட்சியம் அளிப்பதால் மேற்படி சாட்சியம் ஏற்றுக் கொள்ள தக்கதல்ல என்றால் சரியல்ல. 2வது இலக்க தபசில் சொத்தை சண்முகவேல் செட்டியார் 2009ம் ஆண்டு 1ம் பிரதிவாதி மனைவி கண்ணகி என்பவருக்கு பதிவு செய்யப்படாத ஆவணம் மூலம் தானசெட்டில்மெண்ட் செய்துவிட்டார் என்றால் சரியல்ல. க.எண்.1/55 வீட்டிற்கான தீர்வை ரசீது மற்றும் மின்கட்டணம் ஆகியவற்றை கண்ணகி அவரது பெயரில் செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. தபசில் 2ம் இலக்க சொத்திற்கு கண்ணகிதான் உரிமையாளர் என்றாலும் எனக்கும் வழக்கில் உள்ள மற்ற பிரதிவாதிகளுக்கும் அந்த சொத்தில் உரிமை கிடையாது என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.3ன் சொத்து விபரத்தில் நான்கு மால் விபரத்தில் " நான் நாளது தேதியில் சங்கரலிங்கத்திற்கு கொடுக்கும் இடத்திற்கு மேற்கு " என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிராது தபசில் 3ம் இலக்க சொத்தில் கீழ்புறம் பேர்பாதி 1வது

பிரதிவாதிக்கும், மேல்புறம் பேர்பாதி எனக்கும் சண்முகவேல் செட்டியார் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். பிராது தபசில் 3ம் லக்க சொத்தில் எனக்குள்ள பேர்பாதியை அனுபவிப்பதை 1 மற்றும் 4வது பிரதிவாதிகள் எந்த காலத்திலும் இடையூறு செய்ததில்லை என்றால் சரியல்ல. பிராது 2வது பரிகாரத்தில் 3வது இலக்க சொத்தை நயம் எனும் சரிகட்டி இருசமபங்குகளாக பிரித்து அதில் ஒரு பங்கினை எனக்கு சுவாதீனம் கொடுக்க கேட்டுள்ளேன் என்றால் சரிதான். மறுபங்கை யாருக்கு கொடுக்க வேண்டும் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மறுபங்கை சங்கரலிங்கத்திற்கு கொடுக்கப்படவேண்டும். பிராதில் குறிப்பிட்டுள்ளவாறு 1960ம் ஆண்டு குடும்ப ஏற்பாடு எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. மேற்படி குடும்ப ஏற்பாட்டின் படி 3வது இலக்க தபசில் சொத்து சண்முகவேல் செட்டியாருக்கும் மீத தபசில் 1, 2 லக்க சொத்துக்கள் பொது பாத்தியம் என்று ஏற்பாடு செய்யப்பட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிராது தபசில் 1வது இலக்க சொத்தில் எனக்குரிய பாகத்தை நான் பெற்றுக் கொள்வதில் 1 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான். கண்ணகி 4ம் பிரதிவாதி சுப்பம்மாளின் மகள் ஆவார். 1, 4 பிரதிவாதிகள் மற்றும் கண்ணகி ஆகியோருக்கு வீண் இடைஞ்சல் செய்யும் நோக்கில் தபசில் 2வது லக்க சொத்தை இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. கண்ணகி இந்த வழக்கிற்கு அவசிய தரப்பினர் என்பதால் அவரை இந்த வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கப்படாத காரணத்திற்காக இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டியது என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான். அவ்வாறு அனுப்பாததிற்கு தனிப்பட்ட காரணம் ஏதும் இல்லை. 2019ம் ஆண்டு இருக்கன்குடி கா.நிலையத்தில் புகார் கொடுத்தது தொடர்பான ஆவணங்கள் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யபடவில்லை. வழக்குரை பத்தி 4ல் 3வது இலக்க சொத்தை பொறுத்து மட்டும் தான் பாகபிரிவினை செய்து கொடுக்குமாறு 4, 5 பிரதிவாதிகள் கேட்டதாக குறிப்பிட்டுள்ளேன், 2வது சொத்தை பொறுத்து அந்த பத்தியில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பிராது தபசில் 1, 2 சொத்துக்களை பொறுத்து பாகபிரிவினை கோரி பிரதிவாதிகளிடம் கேட்டதாக பிராதில் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். எனவே இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கான வழக்கு மூலம் இல்லை என்றால் சரியல்ல. நான் செலுத்தியுள்ள நீதிமன்ற முத்திரை

கட்டணம் சரியானது அல்ல என்றால் சரியாகத்தான் செலுத்தியுள்ளேன். பிராது தபசில் 1, 2 லக்க சொத்துக்களை நான் ஒருபோதும் கூட்டாக அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் பிராதில் கேட்ட பரிகாரங்கள் எனக்கு கிடைக்க கூடியதல்ல என்றால் சரியல்ல. நான் உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3, 5 வது பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.